Kamal Haasan

உலகத் தாய்மொழி தினமான பிப்ரவரி 21 ஆம் தேதியன்று "மக்கள் நீதி மய்யத்தின்" துவக்க விழா சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரையில் நடைபெற்றது.

மிகுந்த எழுச்சியுடனும், கட்டுப்பாட்டுடனும் நடைபெற்ற பொதுக் கூட்டத்தை வெற்றி பெறச் செய்த எல்லோருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

முதல் நன்றியை மதுரை மாநகர மக்களுக்குக் காணிக்கையாக்குகிறோம். தொடர்ந்து, நற்பணி இயக்கத்தின் நிர்வாகிகள், பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றி.

விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்த மாண்புமிகு டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கும், விவசாயிகள் சங்கத் தலைவர் P.R.பாண்டியனுக்கும், டெல்லி சட்டமன்ற உறுப்பினர் சோம்நாத் பாரதிக்கும் மனமார்ந்த நன்றியும், வணக்கமும்.

மாநாடு நடைபெற்று முடிகிற வரையில் இருந்து உதவிய பல்வேறு அரசுத்துறைகளைச் சார்ந்த காவல்துறை, தீயணைப்புத்துறை, மின்சாரத்துறை, பொது சுகாதாரத்துறை, பொதுப்பணித்துறை உள்ளிட்ட அனைத்துத் துறை சார்ந்த அலுவலர்களுக்கும், ஊழியர்களுக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றி.

ஏறக்குறைய ஒரு லட்சம் பேர் கலந்து கொண்டு ஒத்துழைத்துச் சிறப்பித்த அனைவருக்கும் நன்றி.

விழா நிகழ்வுகளை உயிர்ப்புடனும் துல்லியமாகவும், உலகமெங்கும் உள்ள அனைத்துத் தமிழர்களுக்கும் கொண்டு சேர்த்த காட்சி ஊடகத்துறை, அச்சு ஊடகத்துறை மற்றும் சமூக

*# 4, Eldams Road, Alwarpet, Chennai - 600 018.*

Kamal Haasan

வலைத்தளங்கள் சார்ந்த அனைத்து பெருமக்களுக்கும் இருகரம் கூப்பி நன்றி சொல்கிறோம்.

மாநாட்டு நிகழ்வுகளை தொலைவில் இருந்து பார்த்துவிட்டு, வாழ்த்திய உலகெங்கும் உள்ள தமிழர்களுக்கும் எங்கள் நன்றியும், வணக்கமும்.

மக்கள் நீதி மய்யத்தின் நடவடிக்கைகளை உறுதி செய்யவும், செய்யவைக்கவும் உருவாக்கப்பட்டுள்ள உயர்நிலைக் குழு உறுப்பினர்களின் ஒரு பகுதியினரை மாநாட்டு மேடையில் அறிமுகப் படுத்தினோம். அவர்களை மீண்டும் உங்கள் ஊடகங்களில் அறிமுகப்படுத்தும் பொருட்டு, அந்தப் பெயர் பட்டியலை இத்துடன் இணைத்துள்ளோம். அதனை வெளியிடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

உங்களின் தொடர்ந்த அன்பும், ஒத்துழைப்பும் எங்களை உலகெங்கும் உள்ள தமிழர்களிடம் கொண்டு சேர்க்கும்.

மனமார்ந்த நன்றி...

அன்புடன்
கமல்ஹாசன்
23 2 2018

# 4, Eldams Road, Alwarpet, Chennai - 600 018.